தஞ்சையில் - முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்!

தஞ்சை, ஜூன் 17 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு செய்து - மருந்து இருப்பு, சேவையின் தரம் குறித்து நேரடியாக கேட்டறிந்தார்.

தஞ்சாவூரில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.6.2025 அன்று தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தை திடீரென பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மருந்துகளின் இருப்பு நிலை, வழங்கும் நடைமுறை, மற்றும் பொதுமக்கள் வருகை குறித்து பணியாளர்களிடம் நேரடியாக விவரங்களை கேட்டறிந்தார். மக்கள் நலன் கருதி குறைந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்ட முதல்வர் மருந்தகம் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவையின் தரம் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

இத்திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும், அதன் மூலம் மருத்துவச் செலவுகள் கணிசமாக குறைத்துவருவதாகவும், அந்த மருந்தகம் பணியாளர் முதல்வரிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

டெல்லியில் 'மதராசி கேம்ப்' தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50 லட்சம் ஒதுக்கீடு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன்.17- டெல்லியில், மதராசி கேம்ப் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

டெல்லி, ஜங்புரா பகுதியில், மதராசி கேம்ப் எனப்படும் குடிசைப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் இடித்து அகற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தினை கடந்த 13-6-2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்களை நேரில் சந்தித்து வழங்கியதோடு, கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறை வேற்றித் தருமாறு வலியுறுத்தினர்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியிருந்த கடிதத்தில், பாதிக்கப்பட்ட 370 தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பின்வரும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டெல்லி முதலமைச்சர் அவர்களை தனது கடிதத்தில் கோரியிருந்தார்:

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) அடுக்குமாடிக் குடியிருப்புகளை முழுமையாகப் பூர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட உரிமை பெற்ற 189 குடும்பங்களுக்கு வழங்கிடவும், விரைவான சமூக உள்கட்டமைப்பு மற்றும் பிரத்யேகமான போக்குவரத்து சேவைகளை வழங்கிடவும் வேண்டும்.

மீதமுள்ள 181 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வருமான உச்சவரம்பு, குடியிருப்புத் தேவைகள் மற்றும் வைப்புத்தொகை நிபந்தனைகளில் சிறப்புத் தளர்வுகளை வழங்கி, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) வீடுகளைப் பெறுவதற்கான தகுதியை விரிவுபடுத்திட வேண்டும்.

G-7-ல் தற்காலிக டெல்லி தமிழ்க் கல்விச் சங்கத்தின் (Delhi Tamil Education Association-DTEA) பள்ளியை அனுமதிப்பதன் மூலம் தற்காலிக தமிழ் வழிப் பள்ளியை நிறுவுதல், உடனடி சேர்க்கை மற்றும் சிறப்புப் போக்குவரத்து வசதிகளுடன் அல்லது நிரந்தர வசதிகள் தயாராகும் வரை ஒதுக்கப்பட்ட இருக்கைகள் மற்றும் இடைக்கால போக்குவரத்து வசதியுடன் அருகிலுள்ள டெல்லி மாநகராட்சிப் பள்ளியில் தமிழ் பயிற்றுவிப்பை அங்கீகரித்தல் போன்றவற்றைச் செய்திட வேண்டும்.

இடம்பெயர்ந்த பெண்களுக்கு இலக்குடன் கூடிய தொழில் பயிற்சி மற்றும் குறு நிறுவன மானியங்கள் மூலம் வாழ்வாதார ஆதரவைத் திரட்டிட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், டெல்லி நிருவாகம் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகி, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், இடம்பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் சுமூகமான, கண்ணியமான மறுவாழ்வை உறுதி செய்வதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு அரசு உதவத் தயாராக இருப்பதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒரு முறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும், அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கிடவும் ஏதுவாக, நேற்று (16-6-2025) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும்

தமிழின் சமவுரிமைக்கான போராட்டம் - ஆய்வரங்கம்!

ப.திருமாவேலன் - ஜெ.ஜெயரஞ்சன் - கருணானந்தம் - மருதையன் - தமிழ் காமராசன் சிறப்புரை!

சென்னை, ஜூன் 17- கருஞ்சட்டை பதிப்பகம் சார்பில் 'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' ஆய்வரங்கம் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 15.06.2025 ஞாயிறு காலை 10 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றது

'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' எனும் இவ்ஆய்வரங்க நிகழ்ச்சியில் பெல்.இராசன் வரவேற்புரையும், தொடக்கவுரையை பேராசிரியர் அ.கருணா னந்தம் நிகழ்த்தினர்.

மேலும் இந்நிகழ்ச்சியில், இந்தி ஆதிக்க எதிர்ப்பு தமிழ்மொழி உரிமை: திராவிட இயக்கத்தின் போராட்டமும் பங்களிப்பும் எனும் தலைப்பில் கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தியாசிரியர் ப.திருமாவேலன், 'உருது, இந்துஸ்தானி, இந்தி; இந்திய - இந்து தேசிய வாதத்தின் மத-இன மொழி ஒடுக்குமுறை அரசியல்' எனும் தலைப்பில் தோழர் மருதையன்; 'இந்தி மொழி ஆதிக்கமும் மொழிகள் சம உரிமையும், இந்திய அரசியலமைப்பும் - அதற்கு அப்பாலும்' என்ற தலைப்பில் சுகுணா திவாகர்; 'மொழி உரிமைக்கான போராட்டத்தில் இரு மொழிக் கொள்கை; தமிழ் நாட்டின் அனுபவம்' எனும் தலைப்பில் தமிழ் காமராசன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் நிறைவுரை ஆற்றினார்.

'தமிழின் சமவுரிமைக்கான போராட்டம் ஆய்வுக் கட்டுரைகள்' நூலை பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் வெளியிட, பேராசிரியர் கருணானந்தம் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பதிவு செய்து பங்கு கொண்ட அனைவருக்கும் 'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' - ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன.

அறம் மதி.முத்துக்குமார் தொகுப்புரை வழங்க இக்லாஸ் உசேன் நிகழ்ச்சியை கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில் ஒருங்கிணைத்திருந்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லை கணபதி ராமசுப்பையா
ஜூன் 17 (2006)

கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் 'தனது தலைவர் கலைஞர்தான்' என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :-

வ. எண்	நாள்	பகுதி	இடம்	பேச்சாளர்கள்
1	18.06.2025	கொளத்தூர் கிழக்குப் பகுதி	திரு.வி.க. நகர் பேருந்து நிலையம் அருகில்	வழக்கறிஞர் இந்திரஜித், திருப்பூர் மகிழவன்
2		கொளத்தூர் மேற்குப் பகுதி	மக்காராம் தோட்டம், கொளத்தூர்.	வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அ.தா.டெக்சின் ரொமேரியோ
3	20.06.2025	துறைமுகம் கிழக்குப் பகுதி	ஏழுகிணறு தெரு, அம்மன் கோவில் தெரு சந்திப்பு.	கரூர் முரளி, மு.மு.முஸ்தாக்
4		துறைமுகம் மேற்குப் பகுதி	இழக்கட்டு பிள்ளையார் கோவில், அண்ணா பிள்ளை தெரு, வரதா மூர்த்தி அப்பன் தெரு சந்திப்பு.	கனல் கங்கா, அ.தஸ்னீம் பானு
5	22.06.2025	அம்பத்தூர் வடக்குப் பகுதி	எம்.டி.எச். ரோடு, பஜார் வீதி (முருகன் கோயில் அருகில்)	ஆவடி பாஸ்கர், க.ஹேமநாதன்
6		அம்பத்தூர் தெற்குப் பகுதி	ஏசியாத் குடியிருப்பு, அண்ணா நகர், மேற்கு விரிவு.	சைதை சாதிக், க.சுபத்ரா
7		அம்பத்தூர் கிழக்குப் பகுதி	கொரட்டூர் பேருந்து நிலையம், கொரட்டூர்.	சேப்பாக்கம் பிரபாகரன், சாய் ரித்திக் சக்திவேல்
8	23.06.2025	வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி	பழனி ஆண்டவர் கோயில் சந்திப்பு, அயனாவரம்.	சேப்பாக்கம் பிரபாகரன், தி.கோகுல்
9		வில்லிவாக்கம் மேற்குப் பகுதி	சிட்கோநகர் 3-வது பிரதான சாலை, வில்லிவாக்கம்.	வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, எஸ்.மாறன்
10	27.06.2025	எழும்பூர் வடக்குப் பகுதி	சிவராவ் சாலை, புளியந்தோப்பு.	வழக்கறிஞர் இந்திரஜித், செ.ஜோதி
11		எழும்பூர் தெற்குப் பகுதி	அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு.	வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அ.தா.டெக்சின் ரொமேரியோ
12	29.06.2025	திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி	பி.எஸ்.மூர்த்தி நகர், ஆடு தொட்டி அருகில், புளியந்தோப்பு	ஈரோடு இறைவன், ர.சந்தோஷ் ஜெய்
13		திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி	வெங்கட்டம்மாள் சமாதி தெரு (ஐந்து விளக்கு அருகில்)	எம்.எல்.நாதன், நா.நரேன் கௌதம்

சென்னை

நாள் : 16-06-2025

சி.மூர்த்தி தலைமையில் கே.கருணாகரன், சி.பாலாஜி முன்னிலையில்

மாதவரத்தில் தியாகி விஸ்வநாததாஸ் 137 வது பிறந்த நாள் விழா!

புழல் எம். நாராயணன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

மாதவரம், ஜூன்.17- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம்சட்டமன்றத் தொகுதியில் சுதந்திரப் போராட்ட வீரர், தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி, 17 வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில், நகர் தலைவர் சி. மூர்த்தி அவர்களின் தலைமையில், சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137 வது பிறந்த நாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கொசப்பூரில் நடைபெற்றது.

சுதந்திரப் போராட்டத்திற்காக நாடகங்கள் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137 வது பிறந்தநாள் விழாவில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களும், கழக நிர்வாகிகளும் அஞ்சலி செலுத்தினார்கள். கைம்பெண்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு மாதவரம் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் புடவைகள் மற்றும் இனிப்பை வழங்கினார்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. பாலாஜி, எம். ஜான்சன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் தியாகி விஸ்வநாததாஸ் நகர் சங்க நிர்வாகிகள் ஈஸ்டர் ராஜ், ஜி.சுரேஷ், ஆர். கலைமணி, ஜி. சங்கர், பி. ஏகாம்பரம், சுகந்தி, தீப லட்சுமி, நிர்வாக செயலாளர் அண்ணாமலை, குமார், சரஸ்வதி, வளர்மதி, வனிதா, மல்லிகா,சாந்தி, சகுந்தலா, சாந்தி, ஜெயா, பவானி, கவிதா, மல்லிகா, தமிழ்ச்செல்வி சுமதி, கோமளா, அலமேலு, உஷா, இந்திராணி, சுந்தரி, டி.மல்லிகா, திருமணி, விருத்தா, கோகிலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர்

எழுத்தாளர் நெல்லை சு.முத்து மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 17 - இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர் மற்றும் எழுத்தாளர் நெல்லை சு.முத்து அவர்களின் மறைவை யொட்டி தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரி வித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர் மற்றும் எழுத்தாளர் நெல்லை சு.முத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையுற்றேன்.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் பணியாற்றியவர் சு.முத்து அவர்கள். அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி குறித்து ஏராளமான நூல்களை எளிய தமிழில் எழுதியுள்ள தோடு மொழி பெயர்ப்பாளராகவும் அறிவியல் தமிழுக்குப் பங்காற்றியுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களுடன் பணியாற்றிய முத்து அவர்கள், அப்துல் கலாம் அவர்கள் குறித்தும் பல நூல்களை எழுதி யுள்ளார்.

இந்தியாவுக்குப் பெருமை சேர்த்து, தமிழ்மொழிக்கு வளம் சேர்த்து வாழ்ந்து மறைந்துள்ள நெல்லை சு.முத்து அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.